செ.வெ.எண் : 33/ஜூன் நாள்:16.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற “இயற்கையுடன் இணைந்து வாழ்தல்” குறித்த விழிப்புணர்வு பேரணியை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ராஜா தினகர் R.C உயர்நிலைப்பள்ளியில் இன்று (16.06.2017) உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை மற்றும் தேசிய பசுமைப்படை ஆகியவற்றின் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், “இயற்கையுடன் இணைந்து வாழ்தல்” குறித்த விழிப்புணர்வு பேரணியைக் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த 1972ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் ஜூன் 5-ஆம் நாள் உலக சுற்றுச்சூழல் தினமாக, ஒரு கருத்தை மையப்படுத்தி சர்வதேச அளவில் அனுசரிக்கப்படுகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், “இயற்கையுடன் இணைந்து வாழ்தல்” என்ற கருத்தை மையப்படுத்தி நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியைக் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இவ்விழிப்புணர்வு பேரணியில் வள்ளல்பாரி நடுநிலைப்பள்ளி, வன்னிவயல் நடுநிலைப்பள்ளி, அறிஞர் அண்ணா நடுநிலைப்பள்ளி, குமரன் நடுநிலைப்பள்ளி, AVMS மெட்ரிக் பள்ளி, லூயிஸ் லெவல் மெட்ரிக்பள்ளி, ஆல்வின் மெட்ரிக்பள்ளி, கொழும்பாலம் உயர்நிலைப்பள்ளி, சுவார்ட்ஸ் மெட்ரிக் மேல்நிலைபள்ளி, தினகர் உயர்நிலைப்பள்ளி, பேராவூர் உயர்நிலைப்பள்ளி, புனித ஜோசப் உயர்நிலைப்பள்ளி, புனித ஜோசப் தொடக்கப்பள்ளி, சேதுபதி நடுநிலைப்பள்ளி, நேஷனல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, புகாரியா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சரஸ்வதி நடுநிலைப்பள்ளி, நஜிரியா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி, வேலுமாணிக்கம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, செய்யதம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் என 1000க்கும் மேற்பட்டோர் இப்பேரணியில் கலந்து கொண்டு, “மரங்களை வளர்ப்போம்” , “நீர்நிலைகளை பாதுகாப்போம்” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியவாறும், விழிப்புணர்வு வாசகங்களை கோசமிட்டவாறும் ஊர்வலமாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இப்பேரணியானது ராஜா தினகர் R.C உயர்நிலைப்பள்ளியில் தொடங்கி சாலைத்தெரு, வண்டிக்காரத் தெரு, அரண்மனைச் சாலை வழியாக இராஜா தினகர் R.C உயர்நிலைப்பள்ளியில் நிறைவு பெற்றது.

முன்னதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், ராஜா தினகர் R.C உயர்நிலைப்பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, மரக்கன்றுகள் நட்டு, பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை - சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் அமைக்கப்பட்டிருந்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய புகைப்படக்கண்காட்சியினை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.சர்வேஸ்ராஜ்,இ.கா.ப., மன்னார் வளைகுடா உயிர்கோள தேசிய காப்பக வன உயிரினக் காப்பாளர் திரு.தீபக் எஸ்.பில்கி,இ.வ.ப., மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) திரு.பாலசுப்பிரமணியன், மாவட்ட கல்வி அலுவலர் திரு.கோ.முத்துசாமி, தொடக்ககல்வி அலுவலர் திரு.சந்திரசேகரன், தேசிய பசுமைப்படை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.ஏ.பெர்னாடிட் உள்பட தலைமையாசிரியர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், பள்ளி / கல்லூரி மாணவ, மாணவியர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**